திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, அவ்வாறு ஆராய்ச்சி செய்கின்றபோது அங்கே உள்ள பனைமரங்களில் அதிகமாக நீர் வருகின்ற காரணத்தினால் அங்கே சாக்லேட் தொழிற்சாலை அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? மேலும் தற்போது பனைப் பொருட்களிலிருந்து செய்யக்கூடிய பொருட்கள் அதிகமான அளவிலே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. ஆகவே தமிழ்நாடு அரசே அவற்றைக் கொள்முதல் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யுமா? தற்போது பனைப் பொருட்களுக்கு போதிய விளம்பரம் இல்லை, எனவே நல்ல முறையில் விளம்பரம் கொடுத்து பொது மக்கள் நன்மை அடையும் வகையில் ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற சாக்லேட் பேக்டரி பற்றி அந்த ஆய்வு முடிந்த பின்னர் பரிசீலிக்கப்படும். மேலும், பனைப் பொருட்களிலிருந்து செய்யக்கூடிய பொருட்களை வெளிநாடுகளில் அதிகமாக விரும்பக்கூடிய சூழ்நிலை இருப்பதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு கண்டிப்பாக அனுதாபத்தோடு பரிசிலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே அதிகமான பனை மரங்கள் இருக்கின்றன. அவற்றிலிருந்து நிறையப் பொருட்கள், பல்வேறு வகையான பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதால் பனைப் பொருட்கள் உற்பத்தி செய்வதற்கென்று ஒரு தனி வாரியம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே பனைப் பொருள் தொழில் வாரியம் அமைக்கப்பட்டு அது இயங்கிக் கொண்டு வருகிறது.

சமூகநலத்துறையின் கீழ் பணிபுரியும் பாலசேவிகாக்கள்,
ஆயாக்கள் சம்பளம்.

வினா எண் 355—திருமதி தா. இராசாம்பாள் : திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) சமூக நலத்துறையின் கீழ் பணிபுரியும் பாலசேவிகாக்களுக்கும், ஆயாக்களுக்கும் சம்பளத்தை உயர்த்தும் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது முதல் வழங்கப்படும்?

1981 மார்ச் 3]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம். ஒரு நபர் குழுவின் (one man commission) ஆய்வில் உள்ளது,

(ஆ) குழுவின் அறிக்கை பெறப்பட்டபின் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு என். விஜயபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சமூகநலத்துறையின் கீழ் பணிபுரிகின்ற பாலசேவிகாக்களுக்கும், ஆயாக்களுக்கும் தரப்படுகின்ற சம்பளம் அவர்களின அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்குக் கூட போதுமானதாக இல்லை. ஆகவே மற்ற அரசு ஊழியர்களுக்கு கொடுக்கப்படுகின்ற சம்பள விகிதத்தையும் சலுகைகளையும் இவர்களுக்கும் வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, நான் முன்பே கூறினேன், அது ஒரு நபர் குழுவின் ஆய்வில் இருக்கின்றது என்று. அந்த ஆய்வு முடிந்ததற்குப் பிறகு பரிசீலனை செய்து அவர்களுக்கும் மற்ற அரசு ஊழியர்களுக்குக் கொடுப்பது போன்ற சம்பளம் கொடுப்போம் என்று கூறிக் கொள்கிறேன்.

திருமதி த. இராசாம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பெண்களுக்கென அமைக்கப்பட்டுள்ள இந்த அமைப்பின் மூலம் பணி புரியும் பாலசேவிகாக்கள் குழந்தைகள் நல காப்பாளர்களாக 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளைப் பராமரித்து இந்த நாட்டுக்கு நல்ல மக்களாக ஆக்கிக் கொடுக்கின்ற பணியினைச் செய்து வருகின்றார்கள். அப்படிப்பட்ட முக்கியமான பணியினைச் செய்கின்ற அவர்களுக்கு எல்லோரையும் விட மிகவும் குறைந்த மதிப்பு ஊதியம் தரப்பட்டு வருகின்றது. ஆகவே அவர்கள் நல்ல முறையில் இயங்கவேண்டும் என்ற வகையில் இளநிலை ஆசிரியர்களுக்கு ஊராட்சி ஒன்றியங்களில் தரப்படுவது போன்ற சம்பள விகிதத்தை தந்து அவர்களை நிரந்தரப்படுத்த இந்த அரசு உத்தேசித்துள்ளதா ?. அதேபோல் நடைத்தாட்டிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களில் பணி புரிபவர்களுக்கு வழங்கப்படுவது போன்ற சம்பள விகிதத்தைக் கொடுத்து அவர்களையும் நிரந்தரமாக்க அரசு உத்தேசித்துள்ளதா ? அப்படி என்றால் அது எந்தத் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் என்பதைத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களில் பணி புரிபவர்களுக்கு கொடுப்பது போன்ற சம்பளம் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்றும் பாலசேவிகாக்கள் 5

வயதுக்குட்பட்ட குழந்தைகளை உருவாக்குகின்ற பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும் கூறினார்கள். அது சம்பந்த மான பட்டியலை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

[முற்பகல் 10–30]

அதாவது பள்ளி இறுதி தேர்வு பெற்றிருந்தால் அவர்களுக்கு மாதம் 100 ரூபாய், பள்ளி இறுதி தேர்வு பெறாமல் இருந்தால் அவர்களுக்கு மாதம் 90 ரூபாய் வழங்கப்படுகிறது. அதேபோல பழங்குடியினர் பகுதிகளில் குழந்தைகள் காப்பாளர்களுக்கு பள்ளி இறுதி ஆண்டு தேர்வு பெற்றிருந்தால், மாதம் ஒன்றுக்கு 165 ரூபாய் வீதமும், பள்ளி இறுதி தேர்வு பெறாமல் இருந் தால் அவர்களுக்கு மாதம் 150 ரூபாய் வீதமும் வழங்கப்படுகிறது.

சென்னை புறநகர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அவர் களுக்கு மாதம் ஒன்றுக்கு 115 ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது, இவ்வாறு அவர்கள் பள்ளி இறுதி தேர்வு பெற்றிருந்தால் அதற் குத் தகுந்த ஊதியமும் இறுதி தேர்வு பெறாமல் இருந்தால் அதற்குத் தகுந்த ஊதியமும் கொடுக்கப்பெறுகிறது. எல்லோ ருக்கும் சமமாக கொடுக்க வேண்டும் என்றுதான் தனி நபர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவின் அறிக்கை வந்தபிறகு, உங்களுக்கு அதை நான் சமர்ப்பிக்கிறேன் என்று கூறிக் கொள்கிறேன்.

தன்னிறைவு திட்டத்தினை நிறைவேற்றி முடித்தல்.

*குறுகிய கால வினா எண் 7—திரு. என். புழனிவேல்: மாண்பு மிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது நடைபெற்று வரும் தன்னிறைவுத் திட்ட வேலைகள் திட்டமிட்டபடி நிறைவேற்றி முடிக்க இன்னும் எவ்வளவு காலம் ஆகும்?

(ஆ) வேலை நிறைவு பெறாத இடங்களில் காலத்தை மேலும் 3 மாதம் நீட்டித்தரப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மூதற்கட்டமாக தன்னிறைவுத் திட்டம் 69 ஊராட்சி ஒன்றியங்களில் செயற் படுத்தப்பட்டு வருகிறது.

1981–82-ல் இதை மேலும் 120 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்படும்.